**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2019**

--------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம், 1972 இலக்கம் 11 கொண்ட அரச விவசாய கூட்டுத்தான சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வழங்க போதிய மற்று பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

**1.2 முறப்புஆபீப்புபீருர்யுதுதீறுகுர்னு ஆடீப்புஜடு**

இநுது ஆறீக்ஜகுயீனு 1.5 அம் புநுதீயீல் வீபுரீக்குகுப்புடுடு வீடுயுஞ்குளீனு ஆடீப்புஜடுயீல் ஏனுத ஆபீப்புபீருர்யுமு முறக்குப்புடகுீனுறுத.
இலுஞ்ஜகு குணுக்குர்ய்வ நீயுமுஞ்குளக்க (இ.தெ.கு.சு) இணுஞ்கு ஏனுத குணுக்குர்ய்வீஜனு நுர்னு மெறுறுகேர்ணுடெனு. ஆநுநீயுமுஞ்குளீனு கிமுர்னு ஏனுத பேர்றுப்பக்குளு, .நு' ஆறீக்ஜகுயீல் நீதீக்கூற்றகுளீனு குணுக்குர்யுவீறுகுர்னு குணுக்குர்யுவுர்ளுரீனு பேர்றுப்பகுளு புநுதீயீல் மெலமு வீபுரீக்குப்புடகுீனுறுனு. ஏனுத முறப்புஆபீப்புபீருர்யுதுதீறுகுர்னு ஆடீப்புஜடு ஒனுறீஜனு வுமுஞ்கவுதுறுக பொர்தீயுளுவமு பேர்ரதுதுமுர்னுதமுர்னு குணுக்குர்யுவச் சுர்னுறுகஜளு நுர்னு பேறுறக்கேர்ணுடளுஞளுனு ஏனு நுர்னு நுமுபகுீறெனு.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு (தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள ', தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 17 ஆம் பந்தி பிரகாரம் திட்டவட்டமான செவினத்திற்கான மானியம், குறித்த செலவினம் நடைமுறைக் காலப் பகுதிக்கான இலாபம் அல்லது நட்டமாக இனங்காணப்பட வேண்டிய போதும், 2014 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை சபைக்கு கிடைத்திருந்த ரூபா 2,947 மில்லியனான அரச மானியப் பெறுமதி ஒதுக்கத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையின் ஒதுக்கம் மற்றும் இலாபம் இப் பெறுமதியால் மிகை கணக்கிடப்பட்டு இருந்தது. | இத் தவறான கணக்கிடல் 2022 ஆண்டு முதல் சீராக்கம் செய்யப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் செலவினத்திற்கான மானியம் குறித்த காலப் பகுதியினுள் வருமானமாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆம் பந்தி பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன் கடப்பாடுகளை கணக்கிடும் போது ஆயுள்கணக்கிடல் முறை அதாவது நிறுவனத்தின் நிகழ்கால சேவைகள் கிரயம், ஊழயர்களின் வயது அளவுகள், ஊழியர்களின் ஆயுள் எதிர்பார்ப்பு, சேவை விற்பனைக்கு ஏற்பட்ட தாக்கம், ஓய்வூதிய வயது, வட்ட | 2023 ஆண்டு முதல் ஆயுள்கணக்கிடல் முறையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை நலன் கடப்பாடுகள் கணக்கிடப்படும் போது நியமம் பிரகாரம் தேவையான செம்மையாக்கல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விகிதம், சம்பளம் மற்றும் வளர்ச்சி சதவீதம் போன்ற எடுகோள்களை பயன்படுத்தி கணக்கிட வேண்டிய போதும், சபையினால் தனது நலன்களை கணக்கிடும் போது ஊழியர் ஒருவர் ஆண்டு இறுதியில் பெறும் ஆரம்ப சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாக கொண்டு சேவை நலன் கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 பந்தி பிரகாரம் உயிரியல் ரீதியான சொத்துக்களை ஆரம்ப இனங்காணலின் போது மற்றும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் விற்பனைக்கான செலவுகளை குறைத்த பின்னர் நியாயமான பெருமதிக்கு அளக்க வேண்டும். எனினும் சபையினால் ரூபா 33,099,131 ஆன நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துப் பெறுமதி அவ்வாறே வருடாந்தம் மதிப்பிடாது நிலையான பெறுமானமாக முன்கொண்டு வரப்படுகின்றது. அப் பெறுமானத்தை மீள்மதிப்பீடு செய்து கொள்வதற்கும் வருடாந்தம் நாளாதுவரையாக்கப்பட்ட மரக் கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டு அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட வணிகப் பெறுமதி கொண்ட மரங்களின் விற்பனை வருமானம் ரூபா ரூபா 28,207,665 ஆன போதும் இந்த மரங்களிற்கு உரிய கிரயம் சொத்துக்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் குறித்த மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை நியாயமான பெறுமதிக்கு கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 34 பந்தி பிரகாரம் சபையினால் 20 பிராந்திய தோட்டக் கம்பனிகளிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள ஹெக்டயார் 111,790 இனது பெறுமதி சபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காணிகளிலிருந்து குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள ஹெக்டயார் 744.56 பெறுமதி மற்றும் கொழும்பில் அமைந்துள்ள 13 தரப்பினர்களிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள ஹெக்டயார் 2.4 ஆன பெறுமதியை | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிற்கு கையளித்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி இதுவரை கணக்கீடு செய்யப்படவில்லை. எனினும் தற்போது இக் காணிகளின் உரிமை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமானது என உரிசெய்து பல | நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களை சரியாக கணக்கீடு செய்து அட்டவணைகளை கணக்காய்விற்கு வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறித்த காணிகளில் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களாக ரூபா 1,941,522,859 தொகை காண்பிக்கப்பட்டு இருந்த போதும் அந்த சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காண்டு சொத்துக்களின் இருப்பை உறுதி செய்து கொள்ள தேவையான விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | வழங்குத் தீர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளதால் இக் காணிகளின் பெறுமதிகளை கணக்கீடு செய்யும் இயலுமை காணப்படுகின்றன. எவ்வாறாயினும் அப் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்காக சொத்துக்களை மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், அதற்காக செலவிடுவதற்காக போதிய நிதி தற்போது இல்லை. அவ்வாறு மதிப்பீடு செய்வதற்காக காணிகளை அளவை செய்யவும் வேண்டியுள்ளது. | |
| (உ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 37 பந்தி பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான சபையினால் நிருவகிக்கப்படும் 18 தோட்டங்களிற்கு உரிய 11,585.44 ஹெக்டயாரான காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து 2019 திசெம்பர் 31 திகதி நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களாக குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிற்கு கையளித்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி இதுவரை கணக்கீடு செய்யப்படவில்லை. எனினும் தற்போது இக் காணிகளின் உரிமை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமானது என உரிசெய்து பல வழங்குத் தீர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளதால் இக் காணிகளின் பெறுமதிகளை கணக்கீடு செய்யும் இயலுமை காணப்படுகின்றன. எவ்வாறாயினும் அப் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்காக சொத்துக்களை மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், அதற்காக செலவிடுவதற்காக போதிய நிதி தற்போது இல்லை. அவ்வாறு | காணிகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | மதிப்பீடு செய்வதற்காக காணிகளை அளவை செய்யவும் வேண்டியுள்ளது. |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 பந்தி பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கை 3.2.3 இல் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அந்த சொத்துக்களை பெறுமானத் தேய்விடலை ஆரம்பிப்பதாக குறிப்பிட்டுள்ள போதும், அதற்கு முரணாக 2019 ஆண்டினுள் தோட்டங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,141,293 ஆன நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதியை கவனத்திற் கொள்ளாது மீளாய்வாண்டிற்கு பெறுமானத் தேய்விடப்பட்டு இருந்தது. | பிரதான அலுவகம் 2019 ஆண்டிலிருந்து கொள்வனவு செய்த திகதியின் பிரகாரம் காலகழிவு செய்துள்ளதுடன் தோட்டத்துறையில் முழு ஆண்டிற்கும் காலகழிவு செய்துள்ளது. 2022 ஆண்டு முதல் அந்த கணக்கீட்டுக் கொள்கை பிரகாரம் கணக்குகள் சரிசெய்யப்பட்டு உள்ளன. | சபைக்கு சொந்தமாக நிலையான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைக்கு ஆக்கப்பட்ட திகதி முதல் கணக்கீட்டுக் கொள்கை 3.2.3 பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | சபையினால் சொத்துக்களின் எதிர்வரும் பயனுள்ள ஆயுட்காலத்தை கவனத்தில் கொள்ளாது பெருமானத் தீவு கணக்கிடப்பட்டிருந்தது. | இங்கு பிரதான அலுவலகம் மற்றும் தோட்டங்களாக எடுக்கும் போது தோட்டங்களில் காணப்படுவது தொழிற்சாலைகள் இயந்திர உபகரணங்கள் ஆவதுடன் அதன் செயற்பாடுகளை கவனத்தில் கொள்ளும் போது பெறுமானத் தேய்வு அளவுகள் அதிகமாக உள்ளதால் முன்னரிலிருந்தே இரண்டு பெருமானத் தேய்வு விகிதங்களின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது. கனணிகள் மற்றும் கனணி அச்சுப் பொறிகளிற்காகவும் தற்போது நிறுவனம் மேற்கொண்டு செல்லும் இரண்டு பெருமானத் தேய்வு விகிதங்களையும் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதுடன் பழைய சொத்துக்கள் முழுமையாக பெருமானத் தேய்வு செய்யப்பட்ட பின்னர் எஞ்சுகின்ற புதிய பெருமானத் தேய்வு விகிதம் நிறுவனத்தினால் தொடர்ந்தும் | நிலையான சொத்துக்களிற்காக பெறுமானத் தேய்விடும் போது அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலத்தை கவனத்திற் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பேணி செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | கணக்கீட்டுக் கொள்கை 3.2.7 பிரகாரம் தேயிலை மற்றும் இறப்பரிற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவுகள் முதிர்ச்சியடையாத பயிர்களிலிருந்து முதிர்ந்த பயிர்களிற்கு மாற்றப்படும் காலம் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள போதும், சபையின் தோட்டங்களில் காணப்படும் ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்களான கொக்கோ, கடுகு, கருவா, சாதிக்காய், பாக்கு, ஏலக்காய் மற்றும் மிளகு மற்றும் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களான மரம் மற்றும் இஞ்சிற்கான முதிர்வடையும் காலம் சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2020 ஆண்டிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகளில் ஊடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டுக் கொள்கைகளை வெளியிட்டு அதன் பிரகாரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கரத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் செயற்படுத்தி இருந்த ‘‘தோட்ட அபிவிருத்தி கருத்திட்டம்’’ 2010 ஆண்டில் முடிவடைந்திருந்த போதும் அந்த கருத்திட்டத்திற்கு உரியதாக கூரை தகரங்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் செலவிடப்பட்ட ரூபா 4,136,733 தொகை சபையின் நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த பெறவேண்டிய மீதிகளிற்காக 9 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்திருந்த போததுடன அத்தொகையை அறவிடுவது நிச்சயமற்றதாக இருந்த போதும் அதற்காக எவ்வித ஏற்பாடும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2009 ஆண்டளவில் கைத்தொழில் அமைச்சிற்கு சொந்தமான நிறுவனத்தின் மூலம் தோட்டங்களிற்கு கூரை தகரங்களை வழங்க கருத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதுடன் அங்கு ஜனவசம இற்குரிய தோட்டங்களிற்கு கூரை தகரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அத் தொகை மேற்குறித்த நிறுவனங்களினால் மீள்நிரப்பப்பட்டது. இக் கருத்திட்டம் 2010 ஆண்டளவில் நிறைவடைந்துள்ள போதும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு மீள்நிரப்பப்படாத தொகை ரூபா 4,136,732.52 ஆகும். இத் தொகை தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதும் | தொங்கள் மீதிகளிற்காக தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டம் தற்போது செயற்படாததால் தேவையான கணக்கு திருத்தங்களை செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2001 ஆண்டில் குத்தகை அடிபப்டையில் தனியார் துறையினரிற்கு ஒப்படைக்கப்பட்ட மொன்தகிரிஸ்தோ தோட்டத்தின் தேறிய சொத்துப் பெறுமதியாக ரூபா 40,503,226 தொகை 18 ஆண்டுகளாக ஏனைய கடன்படுனரின் கீழ் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படுவதுடன் இவ்வாண்டு வரைவு கணக்காய்வு அறிக்கைக்காக பதில் வழங்கும் போது இத் தொகை மொன்த கிரிஸதோ தோட்டத்தை குத்தகை வழங்கியதற்காக பெறவேண்டிய வருமானமாக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறவேண்டிய மீதியை அறவிடுவது நிச்சயமற்றதாக காணப்பட்ட போதும் இந்த மீதிக்காக ஏற்பாடு செய்ய மீளாய்வாண்டினுள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தில் மொன்தகிரிஸ்தோ பெயரில் காணப்படுவது (H/O 62910) மொன்தகிரிஸ்தோ நிறுவனத்திற்கு குத்தகை வழங்கியதில் பெறவேண்டிய குத்தகை வாடகை வருமானம் ஆவதுடன், அது கடந்த ஆண்டின் போது கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலாக தவறுதலாக மொன்த கிரிஸ்தோ தோட்டத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதியாக குறிப்பிட்டுள்ளது சரிசெய்யப்பட வேண்டும். | நிலுவை கடன்படுனர் மீதியை அறவிட மற்றும் தொங்கல் மீதினளிற்காக ஏற்பாடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட வணிகப் பெறுமதியுடன்கூடிய மரங்களின் விற்பனை வருமானம் ஒவ்வொரு தோட்டங்களிற்குமான நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ரூபா 28,207,665 ஆன போதும் இந்த வருமானம் ரூபா 25,883,500 ஆக நிதிகூற்றுக்களில் ஏனைய வருமானத்தின் கீழ் இனங்காணப்பட்டு இருந்ததால் ரூபா 2,324,165 இனால் சபையின் ஏனைய வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது. | மரங்கள் விற்பனையினால் கிடைத்த வருமானம் ரூபா 28,207,665 தொகை சரியான போதும், தோட்டங்களினால் அதற்குரிய கணக்கீடு செய்யப்பட்டுள்ளதானது காசு அடிப்டையிலான கணக்கீட்டு பெறுமானமானதுடன் எதிர்காலத்தில் அதை சரியான விதத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு தோட்டங்களிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | விறபனை வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | முதிர்ந்த இறப்பர் பயிர்களிற்குரியதாக 2018 ஆண்டு இறுதியில் நிலவிய திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 123,452,405 ஆன போதும் | 2019 நிதி அறிக்கைகளில் ஆதன பொறி மற்றும் உபகரண குறிப்புக்கள் மேவுகை செய்யப்பட்டுள்ள வாறு 2018.12.31 திகதி நிலவிய திரண்ட | இனங்கண்ட தவறு சீராக்கல்களை முறையாக மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆண்டில் இறப்பர் பயிர்களிற்குரிய ஆரம்ப திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த இறப்பர் பயிர்களிற்குரிய திரண்ட பெறுமானத் தேய்விற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 44,092,274 தொகை செம்மையாக்கப்பட்டு இருந்ததுடன் அதற்குரிய விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே தேயிலை பயிர்களிற்குரியதாக 2018 ஆண்டிறுதியில் நிலவிய திரண்ட பெறுமானத் தேய்வாக ரூபா 160,145,049 ஆன போதும் 2019 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப திரண்ட பெறுமானத் தேய்வு மீதி ரூபா 290,650,606 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆண்டில் ஆரம்ப திரண்ட பெறுமானத் தேய்வு மீதி ரூபா 130,505,557 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பெறுமானத் தேய்வு 2019.01.01 திகதியிற்கு சரிசெய்து காண்பிக்கப்பட்டு உள்ளதுடன், உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் மற்றும் ஆதன பொறிகளிற்கு இடையே திரண்ட பெறுமானத் தேய்வை சீராக்கிய போதும் அதன் மூலம் ஒட்டு மொத்தமாக எடுக்கும் போது திரண்ட பெறுமானத் தேய்வில் மாற்றம் ஏற்பட்டு இல்லாததுடன், ஒட்டு மொத்தமாக எடுக்கும் போது திரண்ட பெறுமானத் தேய்வு குறை மதிப்பீடு செய்யப்படவும் இலலை. ஆகையால் ஆண்டின் நிதி அறிக்கைகளில் இலாப நட்டக் கணக்கு ஐந்தொக்கு இதன் மூலம் தாக்கம் ஏற்படவில்லை. அவ்வாறே இறப்பர் பயிர்களில் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆண்டில் திரண்ட பெறுமானத் தேய்வு குறைவொன்று காண்பிக்கப்பட்ட போதும் அது சரிசெயதல் ஒன்றாவதுடன் அது குறை மதிப்பீடாகவில்லை. | வெவ்வேறாக மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | 2018 ஆண்டிறுதியில் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 531,598,418 தொகை மற்றும் 2019 ஆண்டின் ஆரம்ப திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதி (செம்மையாக்க முன்னர்) ரூபா 488,602,828 தொகையானதால் அந்த இரண்டு மீதிகளிற்கு இடையே ரூபா 42,995,589 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2018 ஆண்டில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களில் மற்றும் ஆதன பொறி மற்றும் உபகரணங்கில் திரண்ட பெறுமானத் தேய்வு சரியாக வேறாக்கப்பட்டு இருக்காததுடன் 2019.01.01 திகதியளவில் அது சீராக்கப்பட்டுள்ளது. ஏவ்வாறாயினும் ஒட்டு மொத்தமாக எடுக்கும் போது திரண்ட பெறுமாகத் தேய்வு ஒதுக்களில் 2018.12.31 திகதிக்கு மற்றும் 2019.01.01 திகதிக்கு எவ்வித மாற்றமும் ஏற்படாததுடன் இது 2019 | இனங்கண்ட தவறு சீராக்கல்களை முறையாக மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை வெவ்வேறாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதிக்கூற்றுக்களில் குறிப்பினூடாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. | |
| (ஊ) | சபையினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 54 (ஈ) பந்தி பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பில் பெருமானத் தேய்வு முறை மற்றும் பெருமானத் தேய்வு விகிதத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படிருந்த போதும் ரூபா 10,124,003 ஆன ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்கு உரியதாக பெறுமானத்தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | தேயிலை மற்றும் இறப்பர் பயிர்செய்கைக்காக மாத்திரம் விகிதங்களை வெளிப்படுத்தியுள்ளதுடன் நேர் கோட்டு அடிப்படையில் காலக்கழிவு மேற்கொள்ளப்படுவதாக 2020 ஆணடில் இருந்து வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை சரியாக பெறுமான தேய்வு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்கின் மீதி | 520,297,487 | 445,947,513 | 74,349,974 | 2019 நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்கின் மீதி சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் 2019.12.31 திகதிக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்க மீதிக்கு சமனாகவுள்ளது. | சரியான அட்டவணைகளை தயாரித்து அம்மீதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பணிக்கொடை மிகை அறவீட்டு கணக்கின் மீதி | 152,431,129 | 152,740,006 | 308,877 | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம; பணிக்கொடை மிகை அறவீட்டு கணக்கின் மீதி மற்றும் பட்டோளையின் மிகை அறவீட்டு கணக்கின் மீதி அல்லாததுடன் தங்களால் | சரியான அட்டவணைகளை தயாரித்து அம்மீதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | அட்டவணையின் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள மீதி மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்படும் மீதியும் சமனாகவில்லை. | |
| (இ) | பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கின் மீதி | 729,874,650 | 723,568,859 | 6,305,791 | 2019 நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கின் மீதி ரூபா 729,874,650 ஆவதுடன் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணையில் 2019.12.31 திகதிக்கு பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கின் மீதி அதற்கு சமனாகியுள்ளது. | சரியான அட்டவணைகளை தயாரித்து அம்மீதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி. | 119,318,496 | 97,709,342 | 21,637,005 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய கணக்குகள் ஒப்பாய்வு செய்யப்பட்டு அந் அறிக்கையுடன் மீதி உறுதிப்பட்டு கடிதம் 2023 செப்தெம்பர் 22 ஆம் திகதி உறுதி செய்து கொள்வதற்காக மிதி ரூபா 119,318,495 எனக் குறிப்பிடப்பட்டு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுவரை அதற்காக அவர்களிடமிருந்து பதிலொன்று கிடைக்காததுடன் | கிடைக்க வேண்டிய மீதிகள் மீதி உறுதிப்பாடு மூலம் உறுதிசெய்து கொண்டு சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |

எங்கள் கணக்ககுளின் பிரகாரம் தற்போது இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனதில் காணப்படும் மீதி இந்த பெறுமானத்திற்கு சமனாகியுள்ளது.

### 1.5.5 தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கரத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொடர்ச்சியான நட்டமடைதலின் மீது 2019 திசெம்பர் 31 திகதிக்கு சபையின் தேறிய சொத்துக்கள் மற்றும் செயல்பாட்டு மூலதனம் முறையே ரூபா 607.02 மில்லியனாக மற்றும் ரூபா 1,795.70 மில்லியனான மறை பெறுமானத்தை கொண்டிருந்தது. மேலும் அத் திகதியில் புறக்கணிக்கப்பட்ட நியதிச்சட்ட கொடுப்பனவுகள் ரூபா 1,513.49 மில்லியனாக இருந்தது. இதன் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும்தன்மை தொடர்பாக பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. நிதிக்கூற்றுக்களிற்கான இலக்கம் 2.4 குறிப்பு மூலம் பணிப்பாளர் சபையினால் சபையை மறுசீரமைக்க வேண்டுமென முடிவு செய்துள்ளதாக வெளிப்படுத்தியிருந்த போதும் 2024 மார்ச் 31 வரை அத்தகைய மறுசீரமைப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேறிய சொத்துக்கள் மறை பெறுமானத்தை பெறுவதற்கு காரணமாக அமைவது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு ஒப்படைத்த காணி, கைத்தொழிற் சாலைகள், கட்டிடங்களின் பெறுமதிகள் கணக்குகளிற்கு எடுக்கப்படாததனால் ஆவதுடன் அந்த சொத்துக்களின் பெறுமதிகள் சேர்க்கப்படும் போது தேறிய சொத்துக்கள் நேர் பெறுமானத்தை எடுக்கும். ஆவ்வாறே இந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய பாரிய தொகையை செலுத்த நேரிடும். இப் பிரச்சினை இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து காணப்படுகின்றது. | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்குகளிற்கு உள்ளடக்குவது மற்றும் புறக்கணிக்கப்பட்ட நியதிச்சட்ட கொடுப்பனவுகள் தீர்ப்பதனை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் |

## 1.5.6 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பிரதான அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் | 1,503,744,550 | விரிவான அட்டவணைகள், காணிகளின் தளகோளங்கள் திட்டங்கள் மற்றும் பரிமாற்றத்திறகான வர்த்தமானி போன்றவைகள். | கட்டிட திட்டங்கள் தற்போது எம்மிடம் இல்லை. 1972 ஆண்டின் போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சுவீகரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் பின்னர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால் பொறியியல் திட்டங்கள் சபையிடம் இல்லாததுடன் ஆதன மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிலைத்துள்ள தன்மை மற்றும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக போதிய மற்றும் உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரொக்வுட் தோட்டத்தின் பணக்கொடை மற்றும் மிகை அறவீடு கொடுப்பனவு. | 12,656,292 | பணக்கொடை கொடுப்பனவு அட்டவணை மற்றும் கொடுப்பனவு வவுசர்கள் | தியலும தோட்டத்தில் மற்றும் முல்ஹல்கெலே தோட்டத்திலிருந்து அனுப்பப்பட்ட பணிக்கொடை ஒதுக்கத்திற்கான அட்டவணை மற்றும் ரொக்வுட் தோட்டம் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த தகவல்கள் இத்துடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை மற்றும் மிகை அறவீட்டுக் கொடுப்பனவுளை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த தகவல்கள் போதாமையினால் போதுமான மற்றும் குறித்த சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இறுதி இருப்பு | 74,377,945 | இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை, பௌதீக இருப்பு ஒப்பாய்வு அறிக்கை. | உற்பத்தி கிரயம் / தேறிய விற்பனை சராசரிப் பெறுமானத்தின் (NSA) மீது இருப்பு கணிப்பீட்டு அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இருப்பு மீதியை உறுதிப்படுத்துவதற்காக போதுமான மற்றும் குறித்த சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முற்பணக்கணக்கின் ஆரம்ப மீதியினுள் 2012 ஆண்டு முதல் நிலவி வரும் மீதி. | 9,071,137 | விரிவான அட்டவணைகள். | 2012 ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 9,071,137 ஆன மீதிக்கு தேவையான தகவல்கள் கண்டறிய ஆவணங்கள் இல்லை. 2012 ஆண்டு முதல் | நீண்டகால முற்பண மீதிகளை பகுப்பாய்வு செய்து இனங்காண முடியுமான அனைத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆண்டு வரை செலுத்தப்படாத முற்பணமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 4,772,794 ஆன மீதியிலிருந்து தற்போது ரூபா 3,424,718 ஆன தொகையொன்றை தீர்த்துக் கொள்ள நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தீர்ப்பதற்கு உள்ள தொகை ரூபா 1,298,077 ஆகவுள்ளது. | நடவடிக்கைகளை யும் எடுக்க வேண்டும். |
| (உ) | 2000 ஆண்டின் போது, கொத்மலே நீர்த்தேக்க கருத்திட்டத்திற்கு மஹவெலி அமைச்சு இடமிருந்து கிடைத்து அப்பணியில் ஈடுப்படுத்தப்படாத தொகை. | 36,310,518 | வங்கி உறுதிப்பாடு மற்றும் பணம் கிடைக்கும் விபரங்கள். | வீடுகள் அமைத்து கொடுப்பதற்காக கிடைத்த இந்த தொகையிலிருந்து அப் பணிகள் நிறைவு செய்யப்படாததுடன் இது 2000 ஆண்டிற்கு மாத்திரம் உரிய பெருமானமாகையால் அக்குறித்த தொகை தொடர்பாக எவ்வித தகவல்களும் தற்போது நிறுவனத்தில் இல்லாததனால் எதிர்காத்தில் ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 36.3 மில்லியன் தொகையிலிருந்து குறித்த பணியை மேற்கொள்ளவில்லையென தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் அமைச்சிலிருந்து கிடைத்த இந்த தொகை தொடர்பாக உடனடியாக விசாரணை நடாத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதி | 130,900,290 | மீதி உறுதிப்பாட்டு கடிதங்கள் | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளை இனங்காணபதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | 20 ஆண்டுகளிற்கு முன்னரில் இருந்து நிலவி வரும் ஓனுகல்ஓய தோட்டத்தின் நிலையான சொத்துக்கள் மீதி | 6,013,927 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பௌதீக சொத்துக்கள் ஒப்பாய்வு அறிக்கை | ஓனுகல்ஓய பெயரில் தோட்டமொன்று அதன் போது ஜனவசம இற்கு சொந்தமாக இருந்துள்ளதுடன், மகாவலி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதனால் அது நீர்தேக்கத்தில் மூழ்கியுள்ளது. அந்த தோட்டங்களிற்கு | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள தற்போது பௌதீக ரீதியான இருப்பு இல்லாத சொத்துக்கள் தொடர்பாக போதிய சான்றுகளை இனங்கண்டு அது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சொந்தமான நிலையான சொத்துக்களிற்கு பௌதீக ரீதியாக இருப்பு இல்லாத போதும் ஏடுகளிலிருந்து பதிவழிக்க தேவையான போதிய சான்றுகள் இல்லாதமைனால் பதிவழிழக்க போதிய தகவல்களை சமர்ப்பிக்க முடியாதுள்ளது. | தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | நடைமுறை வேலைகள் | 15,675,572 | வேலை அங்கீகரிப்பதற்கு உரிய பணிப்பாளர் சபை பத்திரம், கொடுப்பனவு வவுசர்கள், வேலை முடிவுறுத்த இயலாதமை தொடர்பாக செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கை. | 2023 ஆண்டில் பௌதீக இருப்பு கணிப்பீட்டின் போது இந்த நடைமுறை வேலைகள் (மூலதன) மீதி பௌதீக ரீதியாக உள்ளனவா இல்லையென தோட்ட அதிகாரியின் உறுதிப்பாடொன்றை பெற்றுக் கொண்டு உள்ளக கணக்காய்வாளரின் பரிந்துரை மீது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பதிவழிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள தற்போது பௌதீக ரீதியாக இல்லாத சொத்துக்கள் தொடர்பாக போதிய சான்றுகளை இனங்கண்டு அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | நிதிக்கூற்றுக் களில் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த முதிர்ச்சியடைந்த பயிர்கள். | 17,925,652 | மரங்கள் கணக்கெடுப்பு அறிக்கை, பெறுமதி மதிப்பீட்டு செய்வதற்கான அறிக்கை மற்றும் விளக்கங்கள். | உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு 2020 ஆண்டில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் மற்றும் அச் சொத்துக்களில் இணக்கம் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | நிதி நிலைமை கூற்றில் வியாபார மற்றும் ஏனைய பெற | 30,574,666 | விரிவான பதிவேடுகள், மீதி உறுதிப்பாடு. | பழைய மீதிகளை உரிய கணக்குகளில் இருந்து அகற்றி பதிவழிப்பதற்காக இந்த கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் | பழைய மீதிகள் மற்றும் செம்மையாக்கல் மீதியை சரியாக இணக்கம் செய்து அம் மீதியை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டியவை களினுள் காணப்படும் செம்மையாக் கல் மீதி | | | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து பதிவழிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | ஆதன பொறிகள் உபகரணங்களில் உள்ளடங்கிய ஏனைய சொத்து மீதி. | 8,696,304 | சொத்துக்களின் வகை, நிலைத்திருத்தல், சரியான தன்மை மற்றும் அவற்றின் பெறுமதி போன்றவற்றை பரிசோதிக்க தேவையான அட்டவணைகள். | தோட்ட அபிவிருத்தி சபையின் தோட்டங்களிற்குரிய 1996 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் இந்த ரூபா 8,696,304 பெறுமானம் தொடர்பாக எவ்வித தகவல்களும் தற்போது நிறுவனத்திடம் இல்லாததுடன் இந்தப் பெறுமானங்களை ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சொத்து மீதிகளை இனங்காண மற்றும் அது தொடர்பாக தேவையான செயற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஔ) | பேரேட்டில் வியாபார பெற வேண்டிய கணக்கில் உள்ளடங்கிய மறை மீதிகள் | 122,753,947 | விரிவான பட்டோலைகள். | இங்கு பெற வேண்டிய கணக்குகளில் மறை மீதி காணப்படுவதற்கு காரணமாக அமைவது குத்தகை வாடகை, முற்பணத் தொகையாக எதிர்காலத்திற்காகவும் பெற்றுக் கொண்டிருப்பதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கடன்கொடுனராக காண்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஏனைய பிழையான மறை மீதிகளை தற்போது சரி செய்யப்பட்டு வருகின்றது. | பேரேட்டில் வியாபார பெற வேண்டிய கணக்கில் உள்ளடங்கிய மீதிகள் தொடர்பாக சரியான தரவுகளை பேணிச் செல்ல வேண்டியதுடன் அவற்றை நாளாதுவரையாக் கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | தோட்டங்களில் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு | 11,541,671 | அட்டவணைகள் மற்றும் மிகை அறவீட்டு பெறுமதிகளிற்குரிய சட்ட ரீதியான ஆவனங்கள். | நிறுவனத்தினால் தற்போது மிகை அறவீடு கணக்கீடு செய்யப்படுவது அது தொடர்பாக வழக்கொன்று தாக்கல் செய்திருந்தால் | குறித்த சட்டங்களில் ஏற்பாடுகள் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிகளிற்குரியதாக மிகை அறவீடு |

| | | |
|---|---|---|
| நிதியம், தோட்ட பதவியணியினர் சேமலாப சங்கத்திற்கு மற்றும் இலங்கை பெருந்தோட்ட தாரர்களின் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீகை அறவீட்டு பெறுமதி. | மாத்திரமாகும். எனினும் எதிர்காலத்தில் சட்டத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிக்கு உரியதாக மிகை அறவீட்டை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு மற்றும் மேற்குறித்த ஆவணம் மற்றும் அட்டவணைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பிரதான அலுவலகத்திற்குரிய 1 ஆண்டு முதல் 5 ஆண்டு வரை தீர்க்கப்படாத கடன் கொடுனர் மீதி ரூபா 19,485,533 தொகை மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 39,018,431 ஆனதுடன், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது 5 ஆண்டுகளை விஞ்சி உரிமை கோராத கடன் கொடுனர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க சபையினால் செயற்பட்டிருக்கவில்லை. | 5 ஆண்டுகளை விஞ்சியுள்ள கடன் கொடுனர் மீதி ரூபா 601,413 ஆன இரத்துச் செய்யப்பட்ட காசோலை கணக்கு 2021 ஆண்டில் சரி செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 18,057,479 ஆன PH&SWT கணக்கு ஊடாக ரூபா 200,413 ஆன தொகை 2021 ஆண்டின் போதும் ரூபா 352,891 ஆன தொகை 2022 ஆண்டின் போதும் கொடுப்பனவு செய்துள்ளதுடன், எதிர்காலத்தில் நிறுவனத்தின் காணப்படும் செயற்படு மூலதன இயலுமையின் மீது கொடுப்பனவு செய்யப்படும். அவ்வாறே ரூபா 15,083,982 ஆன Rate & Texes ஊடாக நிகழ்காலத்தில் குறித்த வீத வரித் தொகையை உரியவாறு உரிய காலாண்டில் செலுத்தப்பட்டு வருவதுடன் நிலுவை வீத வரிக்காக 2022 செப்டம்பர் மாதம் முதல் 3 மாதங்களிற்கு ஒரு முறை ரூபா 500,000 ஆன தவணையாக செலுத்தப்பட்டு வருகின்றது. தற்போது ரூபா 3,000,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2007 ஆண்டின் போது நாகஸ்தென்ன தோட்டத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கிய பின்னர் அந்த நிறுவனத்திடம் இருந்து அளவிட வேண்டிய ரூபா 2,176,683 தொகை 11 | 11 ஆண்டுகளிற்கு அதிகமான இந்த Quenrich Agro கம்பனியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,176,683 ஆன தொகை தொடர்பாக நிறுவனத்திடம் தகவல்கள் இல்லாததால் எதிர்காலத்தில் எதிர்பாராத கடன் அல்லது ஐயக்கடன் கொள்கை ஒன்றை தயாரித்து சபையின் அங்கீகாரத்தை பெற்று எதிர்காலத்தில் | பெற வேண்டிய மீதிகள் தொடர்பாக முறையான கொள்கையொன்றை அங்கீகரித்துக் கொண்டு அதன் பிரகாரம் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகள காலமாக வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படுவதுடன் இதன் காரணமாக அந்த பெறுவனவு நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது. | எதிர்பார கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நானாவித கடன்படுனர்களாக நிதிநிலைமைக கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,693,337 இற்காக மீதி உறுதிப்பாடு மற்றும் அம் மீதிகளிற்கான போதிய தகவல்கள் மற்றும் ஆவணங்கள் சபையிடம் இல்லாதிருந்ததுடன், 1996 முதல் அறவிடப்படாதிருந்த இந்த மீதிகளை அறவிடுவதற்காக எவ்வித செயற்பாடுகளையும் எடுத்திருக்கவில்லை. | எதிர்பாராக் கடன் மற்றும் ஐயகடன் கொள்கையொன்றை தயாரித்து எதிர்காலத்தில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகள் தொடர்பாக முறையான கொள்கையொன்றை அங்கீகரித்துக் கொண்டு அதன் பிரகாரம் தேவையான ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் தேயிலை கொழுந்து விற்பனைக்காக பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களிடமிருந்து உடன்படிக்கை பிரகாரம் 15 நாட்களை கொண்ட கடன் கால எல்லைக்குள் பணம் அறவிட வேண்டிய போதும், 2019 திசெம்பர் 31 திகதிக்கு மூன்று மாதம் முதல் 6 வருடங்கள் வரையான கால வீச்சளவை விஞ்சியிருந்த கடன்படுனர் மீதி ரூபா 10,482,485 ஆக இருந்தது. | 2019.12.31 திகதியன்று கடன்படுனர்களிற்கு இடையே டீன் சய்ட் தேயிலை கைத்தொழில் கம்பனிக்குரிய மீதி தீர்க்கப்பட்டுள்ளதுடன் ஹட்டன் பெறுந்தோட்ட கம்பனியுடன் தற்போது கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டு வருவதனால் நிலுவை மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறே ரத்வத்த தேயிலை கைத்தொழிற்சாலை இலிருந்து பெறவேண்டிய நிலுவை மீதிகளிற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றதின் இலக்கம் DMR 67818 கொண்ட வழக்கு தற்போது விசாரிக்கப்பட்டு வருவதுடன் நில்தழுகந்த தேயிலை கைத்தொழிற்சாலையில் இருந்து பெறவேண்டிய நிலுவை தொகையை தீர்த்துக் கொள்வதற்காக எம்மிடம் ரூபா 750,000/- ஆன பாதுகாப்பு வைப்பொன்று காணப்படுவதானல் எதிர்காலத்தில் அதன் மூலம் தீர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை பிரகாரம் கொள்வனவாளர்களிடமிருந்து பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் II ஆம் பகுதியின் 5 (1) உப பிரிவு | ஒரு ஊழியர் ஓய்வு பெற்ற அல்லது மரணித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதும், நிதிநிலைக்கூற்றில் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் ரூபா 520,297,488 ஆன பணிக்கொடையை செலுத்தியிருக்கவில்லை. மேலும் பணிக்கொடையாக செலுத்த வேண்டிய ஏதேனும் தொகையை செலுத்துவதனை புறக்கணிக்கும் ஏதேனும் தொழில் தருனர் ஒருவர் அத்தொகைக்கு மேலதிகமாக சட்டத்தின் பிரிவின் பிரகாரம் கணக்கிடப்பட்ட, மிகை அறவீட்டை செலுத்த வேண்டியதால் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் சபையினால் 2019 ஆண்டு இறுதியில் ரூபா 152,431,129 ஆன தொகையை மிகை அறவீடாக செலுத்த வேண்டியிருந்தது. | 2000 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தில் நிலவும் கடுமையான செயற்படு மூலதனப் பற்றாக்குறை காரணமாக உரிய கொடுப்பனவுகளை உரிய காலப் பகுதியில் உரிய முறையில் செய்ய இயலாதுள்ளது. எனினும் தற்போது 2023 ஜுலை மாதம் முதல் தொடர்ச்சியான கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன. | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் பிரகாரம் பணிக்கொடை உரிய காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுப்பதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | தொழில் வழங்குனரினால், ஊழியர் ஒருவரின் ஒவ்வொரு மாத்தினதும் ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகையை ஊழியரின் உழைப்பிலிருந்து கழித்து அடுத்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மற்றும் தொழில் வழங்குனரின் பங்களிப்புத் தொகையையும் அவ்வாறே செலுத்த வேண்டிய போதும் | 2023 ஜுன் மாதம் முதல் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மாதத்திற்கு ரூபா 30 மில்லியன் வீதம் பொது திறைசேரியிடமிருந்து நிதி கிடைப்பதால் அந்த நிலுவைத் தொகையை செலுத்தப்பட்டு வருகின்றது. 2023 ஜுன் மாதம் முதல் | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் பிரகாரம் சேமலாப நிதியம் தவணை கொடுப்பின் ஊடாக சிக்கனமற்ற செலவுகளைத் தவித்துக் கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபை அவ்வாறு 2001 ஆம் ஆண்டு முதல் சுமார் 18 வருட காலத்திற்கு செலுத்தாத ரூபா 729,997,398 ஆன தொகை செலுத்த வேண்டிய சேமலாப நிதியாகவும் தோட்ட பதவியணியினர் சேமலாப நிதியத்திற்கு (ESPS) ரூபா 49,809,062 ஆன நிலுவை மீதியும் காணப்பட்டன. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சேமலாப நிதியத்திற்கு ரூபா 9,202,722 தொகை மற்றும் தோட்ட பதவியணியினர் சேமலாபத்திற்கு ரூபா 1,093,871 ஆன மிகை அறவீடும் செலுத்த வேண்டியிருந்தது. | நிறுவன நிதிகளிலிருந்து உரியவாறு நியதிச் சட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்டு வருகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவு. | ஒவ்வொரு தொழிலாளரிற்கும் தொழில் வழங்குனரினால் அந்த தொழிலாளி தமது சேவையின் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு மாதத்திற்குமாக, அந்த மாதத்தினுள் அந்த தொழிலாளரின் சேவையில் ஈடுபடுத்தியதிலிருந்து அந்த ஊழியர் உழைக்கும் மொத்த வருவாயிலிருந்து மூன்று சதவீதமான பங்களிப்புத் தொகை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்த தொழிலாளர் தொடர்பாக நிதியத்திற்கு செலுத்த தொழிலாளர் கீழ்படிய வேண்டிய போதும் சபையினால் 2011 ஆண்டு முதல் சுமார் 8 ஆண்டுகள் காலமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 39,062,916 தொகை மற்றும் இலங்கை தோட்டக்காரர்களின் சேமலாப சங்கத்திற்கு சங்கத்திற்கு (CPPS) ரூபா 10,350,340 தொகை | 2023 ஜூன் மாதம் முதல் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மாதத்திற்கு ரூபா 30 மில்லியன் வீதம் பொது திறைசேரியிடமிருந்து நிதி கிடைப்பதால் அந்த நிலுவைத் தொகையை செலுத்தப்பட்டு வருகின்றது. 2023 ஜூன் மாதம் முதல் நிறுவன நிதிகளிலிருந்து உரியவாறு நியதிச் சட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்டு வருகின்றது. | ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை தோட்டக்காரர்கள் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தவணையை உரியவாறு செலுத்துவதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தத் தவறிவிடப்பட்டு இருந்தது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பொறுப்பு நிதியததிற்கு ரூபா 407,089 தொகை மற்றும் இலங்கை தோட்டக்காரர்களின் சேமலாப சங்கத்திற்கு ரூபா 837,989 தொகையும் மிகை அறவீடு செலுத்த வேண்டியிருந்தது. | | |
| (ஈ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் | | | |
| (i) 2 (i) (இ) பிரிவு | எந்தவொரு பொருளையும் உற்பத்தி செய்யும் மற்றும் எந்தவொரு சுபாவமுடைய சேவைகளையும் வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களுக்கும் தேசத்தை கட்டியெழுப்பும் சட்ட ஏற்பாடுகள் பொருந்தும் என்றாலும் 2019 நிதியாண்டில் ஈட்டப்பட்ட ரூபா 51,436,256 ஆன நில குத்தகை வருமானம் மற்றும் ரூபா 5,492,601 ஆன ஏனைய வருமானத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,138,577 ஆன தேசத்தை கட்டியெழுப்பும் வரி சபையினால் செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் பொருளாதார சேவை கட்டணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,551,040 ஆன தொகை எம்மால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் குறித்த காலத்திற்குத் தேவையான கொடுப்பனவுகள் சரியாகச் செய்யப்பட வேண்டும். |
| (ii) அட்டவணை I இன் XIV பிரிவு | கொழும்பு தேயிலை ஏலத்தில் விற்பனைக்காக பதிவுசெய்யப்பட்ட தரகருக்கு வழங்கப்படும் தேயிலை மாத்திரம் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் ஏனைய தேயிலை விற்பனை வருமானமான ரூபா 153,413,370 இற்காகவும் வரி கணக்கிடப்பட்டு இருக்கவில்லை. | ஜனவசத்திற்கு சொந்தமான தோட்டங்களிலிருந்து பெறப்படும் தேயிலை இருப்பை அவ்வாறே தலைமை அலுவலகத்தின் வாடிக்கையாளர் பிரிவிற்கு கிடைப்பதுடன் அத் தேயிலை இலங்கை இராணுவம் மற்றும் கடற்படைக்கு வழங்கப்படுகிறது. மொத்தமாக | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் குறித்த காலத்திற்குத் தேவையான கொடுப்பனவுகள் சரியாகச் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தோட்டத்திலிருந்து வழங்கப்படுவதை போன்றே தேயிலை விற்பனை செய்யப்படுவதால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கணக்கீடு செய்யப்படவில்லை. | |
| (உ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டம் 02, 06 மற்றும் 10 பிரிவுகள் | ஒரு காலாண்டிற்கு ரூபா 10 மில்லியனிலும் அதிக வருமானம் உழைக்கும் ஒவ்வொரு நிறுவனமும் இந்தச் சட்டத்திற்கு உட்பட்ட வேண்டிய போதும், சபை அதன் பிரகாரம் செயற்படாததால் பொருளாதார சேவைகள் கட்டணமாக மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 2,161,090 தொகையும் 2007 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 6,357,269 தொகையும் சபையினால் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே நிச்சயித்து குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் ஒரு காலாண்டிற்குரிய சேவைக் கட்டணம் அல்லது அதன் ஒரு பகுதியை செலுத்தப்படாத விடத்து அதனை புறக்கனித்ததாகக் கருதப்படுவதுடன், சபையின் அனைத்து பணிப்பாளர்களிற்கும் அல்லது ஏனைய பிரதான அதிகாரிகளையும் சட்டத்தின் பணிகளிற்காக புறக்னித்தவறாக கருத முடியுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்தத் தொகை செலுத்தப்படவில்லை என்றாலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் 2023.12.01 திகதி இடம்பெற்ற ஆலோசனைக் குழு கலந்துரையாடலின் போது அந்த வரித் தொகையை பதிவழிக்க உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் இணங்கப்பட்டுள்ளது. | பொருளாதார சேவை கட்டணங்கள் உரியவாறு செலுத்துவதற்கு மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் மீது முறையான அங்கீகாரத்துடன் குறித்த சீராக்கத்தை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 387 | காசோலை மூலம் செய்யப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் தனது வங்கி இருப்பு போதுமானதா என்பதை பணம் செலுத்தும் அதிகாரி எப்போதும் சரிபார்க்க | முன்னைய ஆண்டுகளில் இருந்து அத்தகைய மேலதிக பற்று வசதிகள் நிறுவனத்தின் தேவைகளின் | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் திறைசேரின் முன்கூட்டிய அங்கீகாரத்துடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியதுடன், எந்தவொரு அரசாங்க வங்கிக் கணக்கிலிருந்தும் மேலதிக பற்று பெறுவது தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் இலங்கை வங்கி, நேஷன் டிரஸ்ட் வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றில் பராமரிக்கப்படும் 4 கணக்குகளில் கூட்டுத் தொகை ரூபா 80,851,833 இனை 2019 ஆண்டு இறுதியில் வங்கி மேலதிக பற்றாக பேணிய காரணத்தால் ரூபா 14,054,430 தொகை வங்கி மேலதிக பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தது. | அடிப்படையில் பெறப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள் ளது. இது அரச வணிக முயற்சியில் ஈடுபட்டுள்ள அரச துறையற்ற நிறுவனம் என்பதால் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை பெறுவதற்கு மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டுள்ளன. | மாத்திரம் சபையினால் குறித்த விதிவிலக்குகளை செய்ய வேண்டும். |
| (எ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 1/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் I பிரிவின் 3:1 பந்தி மற்றும் 2018 ஆகஸ்ட் 09 திகதிய JEDB/Finanace/10/2018 கொண்ட உள்ளக சுற்றறிக்கை | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்காதவாறு 72 சந்தர்ப்பங்களில் ரூபா 50,000 முதல் ரூபா 10,000,000 வரையிலான முற்பணங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | சுற்றறிக்கையின் படி பண முற்பணமாக வழங்கக்கூடிய அதிகபட்ச தொகை ரூபா 50,000 என்றாலும் காசோலை கொடுப்பனவுகளுக்கு அத்தகைய வரம்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை. பெறுகைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்களுக்கு இதுபோன்ற முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் படி முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 757,593,788 ஆன நட்டமாக காணப்பட்டதுடன் அதனோடு நேரொத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 477,742,649 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 279,851,139 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியிற்கு நிறுவனத்தின் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக இறப்பர் மற்றும் ஏனைய பயிர்கள் விற்பனை வருமானம் ரூபா 70,829,816 இனால் குறைவதும் நுகர்வோர் தேயிலை விற்பனை கிரயம் மற்றும் தேயிலை மற்றும் தேயிலை இருப்புகளிற்குரிய விற்பனை கிரயம் முறையே ரூபா 123,650,228 இனால் மற்றும் ரூபா 229,135,656 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேயிலை விற்பனையினால் கிடைத்த வருமானம் 2018 அண்டிற்கு ஒப்பாக 4.8 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன் இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களிலிருந்து கிடைக்கும் வருமானம் 2018 ஆண்டிற்கு ஒப்பாக 45 சதவீதத்தரல் குறைந்திருந்தது. 2018 ஆண்டிற்கு ஒப்பாக 2019 அண்டில் தேயிலை மற்றும் நுகர்வோர் தேயிலை பயிர்களிற்கான கிரயம் முறையே 177 சதவீதத்தினால் மற்றும் 22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் சொத்து விரைவு விகிதம் 0.3:1 மற்றும் 0.3:1 ஆனது.

- மீளாய்வாண்டில் மொத்த நட்ட விகிதம் 71 சதவீதம் அனதுடன், கடந்த அண்டில் அவ் விகிதம் 43 சதவீதமானது.

- மீளாய்வாண்டில் தேறிய நட்ட விகிதம் 88 சதவீதமானதுடன் கடந்த ஆண்டின் போது அவ் விகிதம் 58 சதவீதமானது.

சபையின் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட விகிதங்கள் பரீட்சிப்பின் போது காணப்படும் நடைமுறை சொத்துக்களினால் அதன் நடைமுறை பொறுப்புக்களை தீர்க்கும் இயலுமை இல்லை எனவும் மொத்த மற்றும் தேறிய நட்ட நிலை தொடர்ச்சியான வளர்ப்பினால் மற்றும் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தை விஞ்சிய கடன் மூலதனம் காணப்படுவதால் நிறுவனத்தின் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் தொடர்ந்தியங்கும் அபாயம் தொடர்பாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

## 3.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 திகதிய 01/2004 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நகழ் அறிக்கையை கணக்காய்காளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2021,2022 மற்றும் 2023 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நகழ் அறிக்கைகள் 2024 ஒக்டோபர் 31 திகதியளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.